11. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause *(1)* of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year *2014–2015* in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

14. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 11–10–2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரிகள் (வணிக மற்றும் பதிவுத் துறை)	..	..	5,03,400
16	நிதித் துறை	..	..	8,79,44,664
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	14,19,88,154	..	..
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	4,29,979	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	..	70,15,286	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	..	1,46,86,458	..

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	..	13,15,474	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	47,22,89,766	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	3,80,07,474	..	..
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	2,14,33,042	..
	பெருமொத்தம்	**65,27,15,373**	**4,44,50,260**	**8,84,48,064**

11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015-2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause *(1)* of Article 205, read with Clause *(3)* of Article 203, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2015–2016 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."